## அக்டோபர் - 01:

## போட்டி ஒழுங்குமுறை சட்டம் - மறு ஆய்வு



- போட்டி ஒழுங்குமுறை சட்டத்தை மறு ஆய்வு செய்ய குழு உருவாக்கப்பட்டுள்ளது.
- ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட இந்த குழுவுக்கு நிறுவனங்கள் வவகாரத்துறை செயலர் இன்ஜெட்டி ஸ்ரீனிவாஸ் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இக்குழு மூன்று மாதங்குள் அறிக்கை சமர்பிக்க வேண்டும்.
- இணைப்பு மற்றும் கையகப்படுத்தல் விதிமுறைகள், நாடுகளுக்கு இடையிலான போட்டிகள், சர்வதேச அளவில் கடைப்பிடிக்கப்படும் விதிமுறைகளையும் இந்த குழு பரிசீலனை செய்ய உள்ளது.

## சிறு குறு மற்றும் நடுத்தர தொழிலுக்கு புதிய கடன் வசதி:




- சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில் (எம்எஸ்எம்இ) துறையினர் 1 மணி நேரத்தில் ரூ.1 கோடி வரை கடன் பெறும் வசதிகளை மத்திய அரசு உருவாக்கியுள்ளது.

**www. psbloansin59minutes.com**

என்கிற இணையதளத்தை மத்திய அரசு உருவாக்கியுள்ளது.

- இந்த தளத்தில் தொழிற்கடன், தனிநபர் கடன், வீட்டுக்கடன் போன்ற வற்றக்கு எம்எஸ்எம்இ துறையினர் விண்ணப்பிக்கலாம்.
- இந்த தளத்தினை சிறுதொழில் மேம்பாட்டு வங்கி, எஸ்.பி.ஐ, பேங் ஆப் பரோடா, பஞ்சாப் நேஷனல் வங்கி, விஜயா வங்கி மற்றும் இந்தியன் வங்கி ஆகியவை இணைந்து உருவாக்கியுள்ளது.

### புதிய நியமனங்கள்:



- எல்லைப் பாதுகாப்புப் படை (பிஎஸ்எப்) படையின் தலைமை இயக்குநராக - ஐபிஎஸ் அதிகாரி ரஜினி காந்த மிஸ்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.
- சஷாஸ்த்ர சீமா பால்(எஸ்எஸ்பி) தலைமை இயக்குநராக - ஐபிஎஸ் அதிகாரி எஸ்.எஸ் தேஸ்வால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

### "பராக்கிரம் பர்வ்"




- இந்தியா பாக்கிஸ்தானில் துள்ளிய தாக்குதல் நடத்தப்பட்ட தினம் - **29, செப்டம்பர் -2016.** இந்நாளின் இரண்டாம் ஆண்டு நினைவாக "பராக்கிரம் பர்வ்" என்ற கண்காட்சி நாடு முழுவதும் நடத்தப்பட்டது .

## எம்.ஜி.ஆர் : நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் தமிழ்நாடு 50-ஆம் ஆண்டு பொன்விழா:

இவ்விழவை முன்னிட்டு முதலமைச்சர் கே. பழனிசாமி சில முக்கிய திட்டங்களை அறிவித்தார்.

- புதிய பன்னாட்டு விமான நிலையம்.
- முதலமைச்சரின் வீட்டுக் காய்கறி உற்பத்தித் திட்டம்
- புறநகர் மருத்துவமனை
- ரூ.482.22 கோடி சாலைத் திட்டங்கள்

> - கோயம்பேடு பேருந்து நிலையத்துக்கு எம்.ஜி.ஆர் பெயர்.
> - எம்.ஜி.ஆர். வாழ்ந்த ராமாவரம் தோட்டம் அமைந்துள்ள சுமார் 20.8 கிமீ. நீளமுள்ள மவுண்ட் - பூந்தமல்லி - ஆவடி நெடுஞ்சாலைக்கு புரட்சிதலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நெடுஞ்சாலை என பெயர் சூட்டப்படும்.



## ஹைப்பர்சோனிக் விமானங்களை சீனா வெற்றிகர சோதனை:



- சீனா முதன் முதலாக மூன்று சிறிய வகை ஹைப்பர்சோனிக் விமானங்கள் சோதனையை வெற்றிகரமாக நடத்தியுள்ளது.
- டி18-1 எஸ், டி18-2 எஸ் மற்றும் டி18-3 என்ற பெயரிடப்பட்ட அந்த விமானங்கள் பலூனில் மேலே தூக்கிச் செல்லப்பட்டு கீழே விழவைத்து சோதனைகள் நடத்தப்பட்டன.

## அக்டோபர் மாதம் - முதல் திங்கள்கிழமை உலக வாழ்விடம் தினம்:




- 2018 -ஆம் ஆண்டின் கருப்பொருள் - "நகராட்சி திட கழிவு மேலாண்மை"( Municipal solid waste management)
- நாம் நமது நகரங்களின் எதிர்காலத்தை வடிவமைப்பதற்கான அனைத்து சக்தியையும், பொறுப்பையும் கொண்டுள்ளோம் என்பதை ஞாபகப்படுத்த இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.

## தேசிய தன்னார்வ ரத்த தான நாள்: (National Voluntary Blood donation Day - 2018)

- "ரத்த தானம் செய்வது மகிழ்ச்சிக்குரியது" - இந்த ஆண்டின் கருப்பொருள்.
- ரத்த தானம் செய்வது உயிரைக் காப்பாற்றும் புனிதமான செயலாகும். ரத்த தானம் குறித்த விழிப்பணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் ஒவ்வவொரு ஆண்டும் இத்தினம் கொண்டாடப்படுகிறது.



## சர்வதேச காபி தினம்:




- "காபி பெண்கள்" (Women in coffee) இந்த ஆண்டின் கருப்பொருள் உலகெங்கிலும் ஒரு பானமாக காபி ஊக்குவிக்க இத்தினம் கொண்டாடப்படுகிறது.

## உலக சைவ தினம்:




- 1977-ஆம் அமெரிக்க சைவ சமரச சமுதாயம் இந்த தினத்தை சைவ தினமாக முன்வைத்தது. பின்னர், 1978- ஆம் ஆண்டு சர்வதேச சைவ சமரசம் யூனியன் இதை அங்கீகரித்தது. அக்டோபர் மாதத்தை சைவ உணவு விழிப்புணர்வு மாதமாக உலக சைவ தினம் துவங்கிவைக்கும் தினம் இன்று.

## சர்வதேச முதியோர் தினம்:




இந்த ஆண்டின் கருப்பொருள் - "வயது முதிந்தோருக்கு எதிராக ஒரு நிலைப்பாட்டை எடுங்கள்" Take a stand Aginst Ageism.

- முதியோரை பாதிக்கும் பிரச்சனைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தவும். மற்றும் வயது முதியோர்க்ள மக்கள் சமதாயத்திற்கு செய்யும் பங்களிப்பை பாராட்டும் வகையில் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.